**சுருக்கம்**

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – திருப்பத்தூர் மாவட்டம் - பணியில் இருக்கும் போது காலமான திரு.பெ.திருமலை, பதிவறை எழுத்தர் என்பவரின் மனைவி திருமதி.J.செந்தமிழ்செல்வி, இளநிலை உதவியாளர் நிலையில் காசாளர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ-5) துறை**

அரசாணை (3ப) எண்.05

நாள் 30.01.2023
சுபகிருது, தை 16
திருவள்ளுவர் ஆண்டு 2054.

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்: 23.01.2020.
2. திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறைகள் ந.க.எண்.பஅ3/9370/2017, நாள்: 17.11.2020.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித ந.க.எண்.13579/2021/டி1, நாள்: 23.11.2022.

.....

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில், திருப்பத்தூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், சோலையார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பதிவறை எழுத்தராகப் பணிபுரிந்து 01.09.2017 அன்று பணியிடைக்காலமான திரு.பெ.திருமலை என்பவரின் வாரிசுதாரரும் மனைவியுமான திருமதி.J.செந்தமிழ்செல்வி என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில், திருப்பத்தூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் நிலையில் காசாளராக தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, தனியர் 17.11.2020 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. மேலும், மறைந்த அரசு ஊழியர் பணிவரன்முறை செய்யப்பட்ட பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும், அவரது மனைவி திருமதி.J.செந்தமிழ்செல்வி கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 18.01.2018 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 30.10.1979 என்றும்,

Scanned with CamScanner

பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 38 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணிநியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துரு உரிய அசல் ஆவணங்களுடன் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில் அரசால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின்னர், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்கீழ், திருப்பத்தூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளர் நிலையில் காசாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டுள்ள திருமதி.J.செந்தமிழ்செல்வி என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 17.11.2020 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகை பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் 02.01.2023-ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.18740/ட்டி.1/2022 மற்றும் மனித வள மேலாண்மை துறையின் அலுவல் சாரா எண்.3859267/ஜி1/2022-1, நாள்:04.01.2023-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.அமுதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பத்தூர் மாவட்டம்.
திருமதி.J.செந்தமிழ்செல்வி, இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, திருப்பத்தூர் மாவட்டம்.
(வழி: மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பத்தூர் மாவட்டம்)
மாநிலக் கணக்காயர், சென்னை -18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.

**நகல்:**

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை,
சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

Scanned with CamScanner

1/283791/2023

மே.கு.க.எண்
பஅ3/9370/2017

மாவட்ட ஆட்சியரகம்(ஊ.வ) பிரிவு,
திருப்பத்தூர். நாள்.10-04-2023

அரசாணை (3ப) எண்.05 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(பஅ5) துறை நாள்.30.01.2023 - இனை சார்வு செய்யப்படுகிறது.

Signed by Hariharan.s
Date: 10-04-2023 18:29:15
Reason: Approved

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர்(வளர்ச்சி),
திருப்பத்தூர் மாவட்டம்

பெறுநர்,

திருமதி.செந்தமிழ்செல்வி,
காசாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
திருப்பத்தூர்.

நகல் வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ), ஊராட்சி ஒன்றியம், திருப்பத்தூர்
------------ உரிய வழிமுறையாக

Scanned with CamScanner